# கலைஞரும் நானும் 24

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர சிலருக்குச் சட்டங்கள், சிலருக்குத் திட்டங்கள், சிலருக்குச் சிலைகள், சாலைகள், சாதனைகள் என்பதைப் போல, எனக்கு அவரது ‘தமிழ்’ அவரை நாளும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது" என்கிறார் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன்.

# ‘முடியாது’ என்றார் கரோஷிமா... முடித்துக்காட்டினார் கலைஞர்!

■ முனைவர் ம.இராசேந்திரன்

“1956-ஆம் ஆண்டு வாக்கில், எங்கள் ஊர் எட. அன்னவாசல் வழியாக, பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்துடன் குதிரையில் ஊர்வலமாகச் சென்றார் கலைஞர். கீழையூரில் பொதுக் கூட்டத்துக்குச் செல்வதாக அம்மா பேசிக் கொண்டிருந்தார்.

அந்தப் பயணத்தின்போதுதான், அவர்மீது விஷம் தடவிய வேல்கம்பு வீசப்பட்டு அதிலிருந்து உயிர் தப்பி இருந்தார். இது நடந்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு எட. அன்னவாசலில், ஒரத்தநாடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் திருமணத்தில் கலைஞர் அவர்கள் இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்திய போது, அவரை நான் முதன்முதலில் பார்த்த அந்த நாள் அவருக்கும் வேறொரு வகையில் நினைவில் இருப்பதை அறிந்தேன்.

## ‘முரசொலி’ வாசித்த சிறுவன்

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போதே அவர் எழுத்தின் அறிமுகம் கிடைத்தது. பள்ளிக்கூடத்துக்கு அருகில், தீவிரமான கட்சிக்காரர் **சின்னப்பிள்ளை தேநீர்க் கடை** வைத்திருந்தார். அவரது கடைக்கு ‘முரசொலி’ பத்திரிகை வந்துவிட்டால், அங்கு சிறு கூட்டம் சேர்ந்துவிடும். அதை வாசித்துக் காட்ட என்னை அழைப்பார்கள். நான் சத்தம் போட்டுப் படிக்க வேண்டும். இதேபோன்ற அனுபவம் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் முன்னாலேயே எனக்குக் கிடைத்தது.

பணி ஓய்வுக்குப் பின், கலைஞர் அவர்களை நாள்தோறும் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். வரவேண்டும் என்பது அவரது அன்புக் கட்டளையாக இருந்தது. அந்த நேரங்களில், அடுத்தநாள் வரப்போகிற ‘முரசொலி’, முந்தைய நாள் முன்னிரவில் கலைஞர் அவர்களுக்கு வரும். அப்போது உடன் இருப்பவர்களில் ஒருவரை உரக்கப் படிக்கச் சொல்லிக் கேட்பார். அவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு படிக்கவேண்டும்.

அப்போது அந்த அறை ஒரு வகுப்பறையாக மாறிவிடும். அவர் ஆசிரியர்; அங்கிருப்போர் அனைவரும் மாணவர்கள்.

## இரண்டு ‘குறளோவியம்’

குமரி திருவள்ளுவர் சிலை திறப்பு விழாக் குழுவில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனும் வகையில் நானும் இருந்தேன். அந்த விழாவில் ஓலைச்சுவடி முதலாக திருக்குறள், தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்களைக் காட்சிக்கு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் நாள்



**கலைஞர் அவர்கள், “யாரையும் எதிர்த்துக் கொண்டோ, பகைத்துக் கொண்டோ, ஓதுக்கி வைத்துவிட்டோ இந்த மாநாட்டை நடத்த விரும்ப வில்லை” என்றார். அதன் பிறகுதான் அது செம்மொழி மாநாடாக மாறியது.**

மாலை 7.30 மணி அளவில் காட்சிக் கூடம் போய்ப் பார்த்த போதுதான் தெரிந்தது. கலைஞரின் **‘குறளோவியம்’** இல்லை. அவருக்குக் குறைகள் பளிச்சென்று தெரியும். அவருடைய நூல் இடம்பெறவில்லை என்றால் நிச்சயம் கேட்பார் என்பதால், பதற்றம் தொற்றிக் கொண்டது.

நாங்கள் இருப்பதோ கன்னியாகுமரி. சென்னை என்றால், சமாளித்துவிடலாம். காலை 10 மணிக்குக் காட்சிக் கூடத்தை முதல்வர் திறந்து வைக்கிறார். அதற்குள் ‘குறளோவியம்’ வேண்டும். அங்குள்ள கடைகளில் கிடைக்கவில்லை என்றதும் நாகர்கோயிலுக்குப் போய் தேடினோம். அங்கும் கிடைக்கவில்லை. பிறகு அந்தப் பகுதியில் உள்ள தமிழ்ப் பேராசிரியர்களின் தொலைபேசி எண்களை வாங்கிக் கொண்டு அறைக்கு வந்தேன். அந்த எண்களில் அழைத்து, ‘குறளோவியம்’ வைத்திருப்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்களின் வீட்டுக்குப் போய் வாங்கி வந்தோம். ஒன்றுக்கு இரண்டாகக் கிடைத்தது.

இரவு 12 மணி இருக்கும். நூல் காட்சி அரங்கில் ‘குறளோவியம்’ இரண்டு படிகளையும், நுழையும் இடத்தில் ஒன்றும் வெளியேறும் இடத்தில் ஒன்றுமாக வைத்தோம். எப்படியும் முதல்வர் பார்வையில் ‘குறளோவியம்’ தப்பிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தோம்.

காலையில் திருவள்ளுவர் நூல் காட்சி அரங்குத் திறப்புவிழா. மாலையில் சிலைத் திறப்புவிழா. விடிந்ததும் ‘காட்சி அரங்குக்கு முதலமைச்சர் வருகிறார்’ என்றார்கள். ஓலைச்சுவடி முதல் அச்சுநூல் வரை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வந்தவர் என்னிடம், **“குறளோவியம் மட்டும் ஏன் இரண்டு இடத்தில்?"** என்று கேட்டார். **“ஐயா நுழைவாயிலில் இருப்பது ‘குறளோவியம்’ முதல் பதிப்பு; இது, இப்போது வந்துள்ள புதிய பதிப்பு. அதனால் இரண்டையும் வைத்திருக்கிறோம்”** என்றேன். புன்முறுவலோடு புறப்பட்டார்.

## கலைஞரின் அரவணைப்பு

கலைஞர் எப்போதும், எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதை விரும்புவார். அதிலும் தமிழறிஞர்கள் எனில், எப்போதும் தனி அக்கறை கொண்டவர். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், நான் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பு வகித்தேன்.

2010-ஆம் ஆண்டில், ஒன்பதாவது உலகத்தமிழ் மாநாட்டினை நடத்துவதற்கு கலைஞர் ஆர்வமாக இருந்தார். ஆனால், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் நொபுரு கரோஷிமா, ‘2010 டிசம்பரிலோ 2011 ஜனவரியிலோ நடத்துங்கள்’ என்றார். டிசம்பர் மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என்பதாலும் 2011 சட்டமன்றத் தேர்தல் காலம் என்பதாலும் வாய்ப்பில்லை என்றும், ஜனவரி 2010 என்பதற்குப் பதிலாக 2010 ஜூனில் நடத்தலாம் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்தது. ஆனால், பேராசிரியர் நொபுரு கரோஷிமா இசையவில்லை. ஆகவே, அது தொடர்பாக மேற்கோள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசனை செய்ய கூட்டத்தைக் கூட்டினார் கலைஞர்.

அந்தக் கூட்டத்தில்தான், **‘செம்மொழி மாநாடு’** தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது. தமிழறிஞர்களில் பெரும்பான்மையினர், ‘உலகத் தமிழ் மாநாடு நடத்துவோம் என்றும், மன்றத் தலைவர் நொபுரு கரோஷிமாவை அமைப்பிலிருந்தே நீக்கலாம்’ என்றும் கருத்து கூறினர். ஆனால், கலைஞர் அவர்கள், “யாரையும் எதிர்த்துக் கொண்டோ, பகைத்துக் கொண்டோ, ஒதுக்கி வைத்துவிட்டோ இந்த மாநாட்டை நடத்த விரும்பவில்லை” என்றார். அதன் பிறகுதான் அது செம்மொழி மாநாடாக மாறியது.

## ‘அற்புதம் நிகழ்த்திய தம்பி’

செம்மொழி மாநாடு முடிந்த கையோடு, தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில் நான் பல்கலைக்கழக நல்கைக்குழுவுக்கு ஒரு திட்டம் அனுப்பி, ரூ.2 கோடி நிதியுதவி பெற்றேன். அதன்மூலம், உலகச் செம்மொழிகளாக அறியப்பட்டிருக்கும் தமிழ், சமஸ்கிருதம் உட்பட ஏழு செம்மொழிகளுக்குமான ‘கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்’ தமிழ்ப் பல்கலையில் தொடங்கப்பட்டது. அதை கலைஞர் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர், “நடைபெற்று முடிந்த செம்மொழி மாநாட்டில் ஓயாது உழைத்து ஓர் அற்புதத்தை நிகழ்த்திய அன்புத் தம்பி முனைவர் இராசேந்திரன்” என்று எனக்குப் பாராட்டுச் சான்று அளித்தது எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. பேசி முடித்துவிட்டுப் புறப்பட்டவருக்கு நன்றி தெரிவித்து நின்றபோது, என் கையைப் பிடித்துக்கொண்டு “போதுமா?” என்று அவர் சொன்னதும், நான் நெகிழ்வின் உச்சத்தில் நின்றேன். இன்றும் நெகிழ்ந்துகொண்டே இருக்கிறேன்.

...பகிர்வார்கள்

---

## அமெரிக்காவின் மோடி எதிர்ப்பு!




அமெரிக்கா சென்றிருக்கும் இந்திய பிரதமருக்கு, முன் எப்போதும் இல்லாத அளவில், எதிர்ப்புக் குரல்கள் வலுத்துள்ளன. மோடி எதிர்ப்பாளர்கள் ‘டிஜிட்டல் டிரக்’ மூலம் தங்களது எதிர்ப்பினைக் காட்டியுள்ளனர். தவிர, அமெரிக்க செனட் உறுப்பினர்கள் 75 பேர் அவர் அவையில் உரையாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மோடி அமெரிக்காவிலிருந்த நேரத்தில் ‘க்ரைம் மினிஸ்டர் ஆஃப் இந்தியா’ என டிவிட்டர் டிரெண்டிங் செய்யப்பட்டது.

வெள்ளை மாளிகையில் உரையாற்றிய அவரிடம், இந்தியாவில் மதச் சிறுபான்மையினருக்கு எதிராக நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறைகள் குறித்து, வெளிப்படையாக கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்தியாவின் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர் என மிகத் தீவிரமான குற்றச்சாட்டுகள் வெள்ளை மாளிகை முன் எதிரொலித்துள்ளன. உலக நாடுகளின் முன் இந்தியாவின் அடையாளத்தை, பெருமிதத்தைச் சீர்குலைத்த பெருமையைப் பெற்று வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதை அகற்றும் காலம் தொலைவில் இல்லை, என்பதையே மக்களின் குரல்கள் எதிரொலித்து வருகின்றன.

---

## ஃப்ளாஷ்பேக்





மதிவாணன்

### நீண்ட வரிசை!

1986-ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று தலைவர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கலைவாணர் அரங்கில், இலங்கைத் தமிழர் போராட்ட இயக்கங்களுக்கு உதவிட, நிதி வசூலிக்கப்பட்டது. வசூலான நிதி அப்போது இயங்கிய ஆறு போராட்ட இயக்கங்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப் பட்டது. அந்த நிதி வசூலிப்புக் கூட்டத்தில் மாற்றுத்திறனாளியான நானும் நீண்ட வரிசையில் நின்று நிதி வழங்கினேன். அதைப் பெற்றுக்கொண்டு தலைவர் கலைஞர், என்னை வாழ்த்தியதை இன்றைக்கும் மறக்க முடியாது. அப்போது வைகோ அவர்களும் உடனிருந்தார்.

**–ஏ.பி.மதிவாணன்,**
**ஜமீன் பல்லாவரம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### பெயர் மாற்றம்!

**1959-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியை, கழகம் கைப்பற்றியது. மேயராக தோழர் வி.முனுசாமியும், துணை மேயராக தோழர் செல்வராசும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல ஆண்டு காலமாக ‘மதராஸ் கார்ப்பரேஷன்’ என்று ஆங்கிலப் பெயர்ப் பலகை தாங்கியிருந்த மாநகராட்சிக்கு, ‘சென்னை மாநகராட்சி’ என அதிகாரப்பூர்வமாகப் பெயர் மாற்றப்பட்டது. தமிழையும், தமிழ் உணர்வையும் தமிழ்நாடெல்லாம் பரப்ப வேண்டும் என்கிற நோக்கத்தின் அடையாளமாகவும், ‘தமிழ் நாடு அரசு’ என்கிற பெயர் மாற்றத்தின் முன்னோட்டமாகவும் ‘சென்னை மாநகராட்சி’ பெயர் மாற்றம் அமைந்தது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 159




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131